ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

**06.08.2026**

1. சங்கடம் போக்கிடும் முருகா
சர்வமாய் காத்திடும் குமரா
உன் பதம் பற்றிடும் மக்கட்கு
உயர் வாழ்வு தந்திடும் வேலவா

2. வேலவா உன் புகழ் பாடியே
விளம்புவேன் ஆறுமுக அரங்கனும்
காலமதில் பராபவ நள்ளி திங்கள்
கணக்காய் சூல குருவார அருளாசி

3. அருளாசியை ஞானவழி மக்கள்
ஆறுமுகன் உன் பதம் பற்றிட
வரம் தரும் பிரணவக் குடில் நோக்கி
வருக வருக என வேண்டி உரைப்பேன்

4. உரைக்கவே சரவண ஜோதியாகி
உன்னுள் யான் கலந்துமே
குறைவின்றி என் மக்கட்கு
குருபரன் நீ தரும் வரங்களை

5. வரங்களை மகா சக்தியாக
வருகின்ற உலக மக்களிடம்
அறங்கள் பெருக அருளுகின்றேன்
அன்னதான மகா சேவையே

6. சேவையே பிறவிப் பிணி அகற்றும்
சிறந்த உபாயமாக இருக்க
அவணியில் அரங்கன் என் தடம்
அன்னதான சேவையை அணுகி

7. அணுகிப் பொருளுதவி செய்து
அறம் வளர்த்து வந்தாலே
ஞானமெனும் உயர் கொள்கை
நம்பிக்கை ஈடுபாடு சிறந்து

8. சிறந்துமே வேலவன் அருளும்
சிவராஜ யோகி அரங்கனென்

அருந்தவ அருளும் பலமும் பெற்று
அணுகுவார் எல்லாம் உயர்வர்

9. உயர்வான ஞானிகள் பூசை
உங்களை உயர்த்தவும்
தயவெனும் சக்தியை தூண்டி
தருமவான் ஆக்கவும் வேண்டி

10. வேண்டியே அரங்கன் யான் நடத்த
விரைந்து கலியுக மக்கள்
உண்டான இவை பூசை வந்து
உண்மைபட கலந்து ஆசி பெற

11. ஆசியுடன் சரணாகதி கொண்டு
அனுதினமும் பூசை தொடர
ஆசியுடன் அரங்கன் என்னுடன்
ஆறுமுகனார் காட்சியும் பெறுவர்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி